DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வியாழன்கிழமை 2ம் நாள் சாட்சியாகிய பெனிட்டா (எ) பிரேமா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெனிட்டா (எ) பிரேமா | வயது | 39 |
| க/பெ. | மணிவண்ணன் | இனம் | பெண் |
| கிராமம் | விண்டர்பேட்டை | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**D.V.C. 7/2019**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>குறுக்கு விசாரணை எதிர்மனுதாரர் தரப்பில் 02.05.2025 ம.சா.1</u>**

1. நான் முதன்மை சாட்சியத்தை படித்து பார்த்து தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். எனது முதன்மை சாட்சியத்தில் 06.02.2015ம் தேதி எதிர்மனுதாரர் என்னை தாக்கியதாகவும் 07ம் தேதி நான் எனது வீட்டிற்கு சென்றதாக தெரிவித்துள்ளது சரியா என்றால் நான் வீட்டிற்கு செல்லவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சமரசம் செய்தார்கள். நான் ஒரு வாரம் கழித்து எனது தந்தை வீட்டிற்கு சென்றதாக தெரிவித்துள்ளேன் என்றால் டைப்பாய்டு காய்ச்சல் வந்ததால் சென்றேன். எதிர்மனுதாரர்தான் என்னை அனுப்பி வைத்தார்.

2. எதிர்மனுதாரரின் சகோதரியின் எங்கு நடந்தது என்றால் பழனிபேட்டையில் உள்ள அஞ்சலி மண்டபத்தில் நடந்தது. நான் எனது கணவருடன் சேர்ந்து நிகழ்ச்சிக்கு சென்றேனா என்றால் ஆமாம். நான் நிகழ்ச்சியில் தாமஸ் என்பவர் என்னை கேள்வி கேட்டதற்கு 29.06.2017ம் தேதி எனது கணவரிடம் கேட்டேனா என்றால் வருடம் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. 29.06.2015ம் தேதி கேட்டேன். நான் 18.06.2015ம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்கு ஏன் காலதாமதமாக கேட்டேன் என்றால் என்னிடம் எதிர்மனுதாரர் வீட்டில் பேசாமல் இருந்ததால் உடனடியாக கேட்கமுடியவில்லை.

3. நான் 30.06.2017 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் 2015 ம் வருடம்தான் கொடுத்தேன். வருடம் தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. எனது புகாருக்கு ஒப்புகை ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் 30.06.2015 ம் தேதி புகாருக்கு கொடுத்த மனுரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும்.

4. 16.08.2016 ம் எனக்கு மூக்கில் அறுவை சிகிச்சை நடந்ததாக மருத்துவ ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது ம.சா.ஆ.7 மருத்துவ ஆவணத்தில் எனக்கு சைனஸ் பிரச்சனை இருந்ததாகவும், அதற்காக அறுவை சிகிச்சை நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு மூக்கு தண்டு உடைந்ததால்தான் அறுவை சிகிச்சை நடைபெற்றது.

5. 11.06.2017 ம் தேதி எனது தந்தை தாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளதற்கு 13.06.20217 ம் தேதி தான் காயச்சான்று பெற்று 17.06.2017 ம் தேதிதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சம்பவம் நடந்த அன்றே மருத்துவமனையில் எனது தந்தை சிகிச்சை எடுத்தார். ம.சா.ஆ.8 ஆவணத்தில் 13.06.2017 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் காயச்சான்று வாங்கிய தேதி அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

6. ம.சா.ஆ.1 ஆவணத்தில் நான் ஒரு வருட காலமாக மேல் மாடியில் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணத்தை நான் எழுதவில்லை. நானும், எதிர்மனுதாரர் தரப்பில் சமாதானம் பேசினோமா என்றால் இல்லை. எனது கணவர் வேலூர் நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ வழக்கு தாக்கல் செய்து ராணிப்பேட்டை நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் நான் எனது தந்தை உடல்நிலை காரணமாக நீதிமன்றத்திற்கு செல்லாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவை ரத்து செய்ய மனுதாக்கல் செய்துள்ளேன். அதற்கான மனுவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞருக்குதான் தெரியும்.

7. நான் எனது கணவர் மீது ஜீவனாம்சம் கோரி M.C 12/2017 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனக்கு

ஜீவனாம்சம் எதிர்மனுதாரர் கொடுக்கவில்லை. மாதம் மாதம் 2024 டிசம்பர் மாதத்தில் இருந்து தற்போது வரை ரூபாய் 20000/– எதிர்மனுதாரர் எனக்கு செலுத்தி வருகிறார் என்றால் எனக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 160000/– அந்த பணத்தை கொடுத்தார். நான், எதிர்மனுதாரர் ரூபாய் 160000/– எனக்கு கொடுக்க வேண்டியதற்கு இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அதுபோல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. எனக்கு ஜீவனாம்சம் பணத்தை தான் நீதிமன்ற உத்தரவு படி எதிர்மனுதாரர் கொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.14, 15 ஆவணம் 2019ம் வருடம் சம்மந்தப்பட்டது என்றாலும், அதன்பிறகு தற்போதைய மாதத்திற்கு வில்லங்கம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.16 முதல் ம.சா.ஆ.20 வரை உள்ள ஆவணங்களில் எதிர்மனுதாரர் பெயர் மற்றும் அவரது பெற்றோர் பெயர் இல்லை என்றால் சரியல்ல.

9. நான் சாதாரணமாக குடும்பத்தில் நடக்கும் பிரச்சனைக்காக குடும்ப வன்முறையாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. அனைவரின் முன்னிலையிலும் என்னை அசிங்கப்படுத்தினார்கள், குடித்துவிட்டு வந்து என்னை அடித்து துன்புறுத்துவார்கள். நான் சொல்வதுபோல் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிர்மனுதாரர்களை பழிவாங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.